தலைமையாக சிறப்பான தலைமையாக, வலுவான தலைமையாக இங்கே விளங்குவதற்கு தமிழக மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். ஆனால், பலர் இன்றைக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இந்தப் புகழில் தங்களுக்குப் பங்கு கிடைக்கவில்லையே என்ற வேதனையோடு இப்போது விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் மிக வேதனையோடு இந்த அவையில் சொன்ன வரிகள் இப்போதும் என் நினைவுக்கு வருகிறது. அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். ''நான் தண்ணீரில் நடந்தால்கூட எனக்கு நீந்தத் தெரியவில்லையே என்று குறை சொல்வார்களே தவிர நான் தண்ணீரிலே நடந்தேன் என்பதைக்கூட பாராட்டுவதற்கு அவர்களுக்குத் தெரியாது'' என்று சொன்னார்கள். இலக்கிய பூர்வமான, ஆழமான, சிந்தனைபூர்வமான இந்த வரிகளை மீண்டும் நான் நினைவுபடுத்தி, தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழை எளிய மக்கள் என்றைக்கும் உங்களுடைய இந்த வேகமான செயல்பாட்டிற்குத் துணை நிற்பார்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 6. அரசினர் தீர்மானம்.

## விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்ட மன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்—விடைகள்'' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 13—2—1993 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்''. என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (13—2—1993) காலை 10-00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. 1991–92 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

85. 1990–91 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

86. 1990–91 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முப்பத்திநான்காவது நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

87. 1991–92 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

88. 1991–92 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

---